| வினாத் தொகுப்பு எண் : |
|---|
| |

# GSTP/2022

பதிவு எண் | | | | | | | | | | |

**2022**

## தாள் – II

## கட்டாயத் தமிழ்மொழித் தகுதித்தேர்வு, (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்)

## இந்த வினாப் புத்தகம்

## பகுதி – அ (கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு – பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பகுதி-ஆ-வினை (பொது அறிவு – பட்டப்படிப்புத் தரம்) உள்ளடக்கியது

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்**

---

முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. **பகுதி-அ-வில் குறைந்தபட்ச மதிப்பெண் (40% அதாவது 60 மதிப்பெண்) பெறாத தேர்வர்களின் பகுதி-ஆ-விற்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது. பகுதி-அ-வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களின், பகுதி ஆ-வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மட்டும் தரவரிசை பட்டியலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.**
4. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். **வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
5. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
6. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
7. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
8. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
9. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களை (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
10. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத்தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
11. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
12. கேள்வி வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி-ஆ) ஆங்கில வடிவே இறுதியானது.
13. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SEAL

[Turn over

## SPACE FOR ROUGH WORK

# பகுதி-அ — கட்டாயத் தமிழ்மொழித் தகுதித்தேர்வு
## (பத்தாம் வகுப்பு தரம்)

# Part-A — Compulsory Tamil Language Eligibility Test
## (SSLC Std)

**வினாக்கள் : 1–100** | **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** | **Total Marks : 150**

---

1. தவறான இணையை அறிக :

   (A) ஜ்வாலை – தீயின் அனல் (ஒளி)

   (B) கார்ஹாரன் – மகிழ்வுந்து ஒலி

   (C) சப்தம் – ஓசை

   (D) ஈக்வலாக – நிலையாக

   (E) விடை தெரியவில்லை

2. "இது செய்வாயா" என்று வினவியபோது "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது

   (A) நேர் விடை

   (B) ஏவல் விடை

   (C) சுட்டு விடை

   (D) உறுவது கூறல் விடை

   (E) விடை தெரியவில்லை

3. 'நல்ல வரலாறுகளைப் படித்தால் தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்' — என்றவரைத் தேர்வு செய்க :

   (A) பேரறிஞர் அண்ணா

   (B) திரு. வி.க.

   (C) அப்துல்கலாம்

   (D) பாரதியார்

   (E) விடை தெரியவில்லை

4. மடலி அல்லது வடலி என்பதனைக் குறிக்கும் பொருள் தேர்க.

   (A) தென்னையின் இளநிலை

   (B) பனையின் இளநிலை

   (C) மாமரத்தின் இளநிலை

   (D) பலா மரத்தின் இளநிலை

   (E) விடை தெரியவில்லை

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி :

மொழியை எவ்வாறு பேசவும் எழுதவும் வேண்டும் என்பதை வரையறை செய்வதே இலக்கணம் எனப்படும். தமிழ் மொழியின் இலக்கண வகைகள் ஐந்து வகைப்படும். உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும் போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன. 'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பிறக்கின்றன. மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு அரை மாத்திரை ஆகும். மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும்.

5. தமிழ் மொழியின் இலக்கண வகைகள் எத்தனை?

(A) நான்கு
(B) ஏழு
(C) ஐந்து
(D) இரண்டு
(E) விடை தெரியவில்லை

6. உயிருக்கு முதன்மையானது எது?

(A) காற்று
(B) அணிகலன்
(C) ஆடைகள்
(D) விளையாட்டுப் பொருட்கள்
(E) விடை தெரியவில்லை

7. உயிர் எழுத்துகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(A) ஏழு
(B) பதினெட்டு
(C) பத்து
(D) பன்னிரண்டு
(E) விடை தெரியவில்லை

8. மெய்யெழுத்துகளை ஒலிக்கும் கால அளவு எவ்வளவு?

(A) ஒரு மாத்திரை
(B) இரண்டு மாத்திரை
(C) அரை மாத்திரை
(D) ஒன்றரை மாத்திரை
(E) விடை தெரியவில்லை

9. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(A) 216
(B) 206
(C) 18
(D) 12
(E) விடை தெரியவில்லை

10. பொருத்தமான காலம் அமைத்தல் :

– எதிர்காலம்

(A) உணவு உண்டவன் அயர்ந்து தூங்கினான்
(B) மண்ணில், விண்ணில் ஆய்வுகள் நிகழ்கின்றன
(C) மலை மீது ஏறுவேன்
(D) மனிதன் நிலவில் சென்று வாழ நினைக்கிறான்
(E) விடை தெரியவில்லை

11. கீழ்கண்ட தொடர் எக்காலத்திற்கு உரியது?

'ஆய்வுகள் செய்து பார்க்கின்றான்'

(A) முக்காலம்
(B) இறந்தகாலம்
(C) எதிர்காலம்
(D) நிகழ்காலம்
(E) விடை தெரியவில்லை

12. எந்த இரண்டு சொற்களை இணைத்தால் சரியான புதிய சொல் கிடைக்கும்?

(A) கண் + அழகு – கண்ணழகு
(B) பண் + உண்டு – பண் உண்டு
(C) கண் + உண்டு – கண் உண்டு
(D) விண் + உண்டு – விண் உண்டு
(E) விடை தெரியவில்லை

13. பொருளுக்கேற்ற வினை மரபை எழுதுக :

(A) சோறு தின்
(B) சோறு சாப்பிடு
(C) சோறு உண்
(D) சோறு பருகு
(E) விடை தெரியவில்லை

14. எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிக :

(A) உசிர் இருக்கிற வரைக்கும் தப்பு செய்ய மாட்டேன்
(B) உயிர் இருக்கிற வரைக்கும் தப்பு செய்ய மாட்டேன்
(C) உயிர் இருக்கும் வரை தவறு செய்ய மாட்டேன்
(D) உசிர் இருக்கும் வரை தவறு செய்ய மாட்டேன்
(E) விடை தெரியவில்லை

15. பின்வருவனவற்றுள் எது சரியானது? (பேச்சு வழக்கு)

(A) அம்மா பசிக்குது. எனக்குச் சோறு வேணும்.

(B) அம்மா பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.

(C) அம்மா பசிக்குது. எனக்கு உணவு வேண்டும்.

(D) அம்மா பசிக்கிறது எனக்கு சோறு வேணும்

(E) விடை தெரியவில்லை

16. நிறுத்தற்குறிகளை அறிதல்.

சரியான நிறுத்தற்குறிகள் இடப்பட்டத் தொடரைக் கண்டறிக :

(A) அந்தோ? பூனையின் காலில் அடிபட்டு விட்டதே!

(B) அந்தோ! பூனையின் காலில் அடிபட்டு விட்டதே!

(C) அந்தோ! பூனையின் காலில் அடிபட்டு விட்டதே.

(D) அந்தோ? பூனையின் காலில் அடிபட்டு விட்டதே.

(E) விடை தெரியவில்லை

17. நிறுத்தற்குறிகளை அறிதல்.

சரியான நிறுத்தற்குறியிடப்பட்டத் தொடரைக் கண்டறிக :

(A) யாழினி, "நிலா நிலா ஓடி வா" எனப் பாடினாள்.

(B) யாழினி நிலா நிலா ஓடி வா எனப் பாடினாள்.

(C) யாழினி 'நிலா, நிலா ஓடி வா' எனப் பாடினாள்?

(D) யாழினி நிலா, நிலா ஓடி வா! எனப் பாடினாள்.

(E) விடை தெரியவில்லை

18. சரியான கலைச் சொல்லால் பொருத்துக :

(a) Linguistics 1. எழுத்திலக்கணம்

(b) Phonology 2. மொழியியல்

(c) Journalism 3. ஒலியியல்

(d) Orthography 4. இதழியல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

19. கூற்று, காரணம் – எது சரி? எது தவறு?

கூற்று : பாடுதல், படித்தல் – தொழிற்பெயர்கள்

காரணம் : ?

(A) முன்னிலைக்கு மட்டும் உரியது

(B) படர்க்கைக்கே உரியது

(C) படர்க்கைக்கு மட்டுமல்லாமல் முன்னிலைக்கும் உரியது

(D) மூவிடத்திற்கும் உரியது

(E) விடை தெரியவில்லை

20. குறில் நெடில் மாற்றம் அறிந்து, பொருள் வேறுபாடு சரியானதைக் கண்டறிக.

தொடு – தோடு

(A) இயற்கை – செயற்கை

(B) வெகுளி – கோபம்

(C) கேண்மை – நட்பு

(D) தொடுதல் – அணிகலன்

(E) விடை தெரியவில்லை

21. சரியானவற்றைப் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | கார் காலம் | 1. | ஐப்பசி, கார்த்திகை |
| (b) | குளிர் காலம் | 2. | மாசி, பங்குனி |
| (c) | முன் பனிக்காலம் | 3. | ஆவணி, புரட்டாசி |
| (d) | பின் பனிக்காலம் | 4. | மார்கழி, தை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

22. பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் —————— என்று பெயர்.

(A) பறவை
(B) பரவை
(C) பரதை
(D) பறப்பு
(E) விடை தெரியவில்லை

23. சொல் – பொருள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தார் | 1. | மகிழ்ச்சி |
| (b) | முனிவு | 2. | மாலை |
| (c) | உவகை | 3. | உறவினர் |
| (d) | தமர் | 4. | சினம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

24. சரியான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு :

மனிதர்களை நிலவிற்கு அனுப்புவோம் ———————— நிலவிற்குச் செல்லத் தயாராக இருங்கள்

(A) எனவே
(B) ஏனெனில்
(C) ஆகையால்
(D) எனில்
(E) விடை தெரியவில்லை

25. பேச்சு வழக்கு : எழுத்து வழக்கு

(A) பானை செய்தல்
(B) பானை முடைதல்
(C) பானை வனைதல்
(D) பானை கட்டுதல்
(E) விடை தெரியவில்லை

26. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

கூவல் என்று அழைக்கப்படுவது ————————

(A) எதனால்
(B) எதற்கு
(C) எது
(D) எவை
(E) விடை தெரியவில்லை

27. சரியான ஊர் பெயரின் மரூஉவை எழுதுக.

(A) கோவை – கோயம்புத்தூர்
(B) கும்பை – கும்பக்கோணம்
(C) நெல்வேலி – திருநெல்வேலி
(D) புதுக்கோட்டை – புதுச்சேரி
(E) விடை தெரியவில்லை

28. ஒரு சொல் தரும் பல பொருள்கள் கண்டறிக. – ‘மா’

(A) மாடம், மதி
(B) வானம், அளவு
(C) மரம், விலங்கு
(D) அம்மா, அறிவு
(E) விடை தெரியவில்லை

29. ஒரு பொருள் தரும் பல சொற்களை எழுதுக.

மலை

(A) வெற்பு, சிலம்பு
(B) வனப்பு, பொருப்பு
(C) பொருப்பு, உயரம்
(D) மலைத்தல், பக்கமலை
(E) விடை தெரியவில்லை

30. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.

'Jungle'

(A) சமவெளி

(B) சோலை

(C) காடு

(D) மலை

(E) விடை தெரியவில்லை

31. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க :

'புதிய உரைநடை' என்னும் நூலுக்காக மா. இராமலிங்கம் சாகித்ய அகாதெமி பரிசு பெற்றார்.

(A) புதிய உரைநடை என்பது எவ்வகையான நூல்?

(B) 'புதிய உரைநடை' என்னும் நூலுக்காக சாகித்ய அகாதெமி பரிசு பெற்றவர் யார்?

(C) 'சாகித்ய அகாதெமி' என்னும் விருது யாருக்கு வழங்கப்படுகிறது?

(D) மா. இராமலிங்கம் பெற்ற பரிசு எவ்வகையானது?

(E) விடை தெரியவில்லை

32. கீழ்காண்பனவற்றுள் சரியான வினாக்களைத் தேர்ந்தெடுக்க.

தாயின் அன்பை எழுத உலகின் மொழிகள் போதாது

(1) யாருடைய அன்பை எழுத உலகின் மொழிகள் போதாது?

(2) எதன் அன்பை எழுத உலகின் மொழிகள் போதாது?

(3) தாயின் அன்பை எழுத உலகின் மொழிகள் போதுமா?

(4) தாயின் அன்பை எழுத உலகில் மொழிகள் உண்டோ?

(A) (2), (4) சரி

(B) (2), (3) சரி

(C) (1), (3) சரி

(D) (4), (1) சரி

(E) விடை தெரியவில்லை

33. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

மைதிலி உணவு உண்டாள்

(A) செய்வினை
(B) செயப்பாட்டு வினை
(C) தன்வினை
(D) பிறவினை
(E) விடை தெரியவில்லை

34. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

வணிகர் கடையைத் திறந்து வைத்தார்.

(A) தன்வினை
(B) பிறவினை
(C) செய்வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

35. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

பரிதி ஊஞ்சலை ஆட்டுவித்தான்

(A) செய்வினை
(B) பிறவினை
(C) செயப்பாட்டுவினை
(D) தன்வினை
(E) விடை தெரியவில்லை

36. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க :

'இந்தியா தான் என்னுடைய மோட்சம்' என்று பாரதியார் கூறுகிறார்.

(A) பாரதியார் எதிர்பார்த்தது என்ன?
(B) மோட்சம் என்று எதனைக் கூறலாம்?
(C) 'இந்தியா தான் என்னுடைய மோட்சம்' என்று கூறியவர் யார்?
(D) பாரதியாரின் கனவு யாது?
(E) விடை தெரியவில்லை

37. வரைந்து – வேர்ச் சொல்லை கண்டறி.

(A) வரைதல்
(B) வரை
(C) வரைந்தான்
(D) வரைந்த
(E) விடை தெரியவில்லை

38. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.

ரோபோ (Robot) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

(A) இயந்திர மனிதன்
(B) கணினி மனிதன்
(C) தானியங்கி
(D) தனியாக செய்தல்
(E) விடை தெரியவில்லை

39. வழுவற்ற தொடரை கண்டறிக

(A) ஞான பீட விருது
(B) ஞாண பீட விருது
(C) நாண பீட விருது
(D) நான பீட விருது
(E) விடை தெரியவில்லை

40. சந்திப் பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக.

(A) ஒன்றை சொல்லுவதற்கென்றே இசைக்கபடும் இசைக்கவல்ல தாள கருவி பறை.
(B) ஒன்றைச் சொல்லுவதற்கென்றே இசைக்கப்படும் இசைகவல்ல தாள கருவிப் பறை.
(C) ஒன்றைச் சொல்லுவதற்கென்றே இசைக்கப்படும் இசைக்கவல்ல தாளக் கருவி பறை.
(D) ஒன்றைச் சொல்லுவதற்கென்ரே இசைக்கப்படும் இசைக்கவல்ல தாலக் கருவிப் பரை.
(E) விடை தெரியவில்லை

41. பிணி – எதிர்ச்சொல் தருக.

(A) துன்பம்
(B) நோய்
(C) இன்பம்
(D) வறுமை
(E) விடை தெரியவில்லை

42. பிரித்தெழுதுதல்

இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) இடம் + மெல்லாம்
(B) இடம் + எல்லாம்
(C) இட + எல்லாம்
(D) இட + மெல்லாம்
(E) விடை தெரியவில்லை

43. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் எழுதுக.

'Rhyme'

(A) இயைபுத்தொடை

(B) மோனைத்தொடை

(C) எதுகைத்தொடை

(D) செந்தொடை

(E) விடை தெரியவில்லை

44. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க :

"வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன"

(A) வாய்மையில் சிறந்த அறமாகக் கருதப்படுவது எது?

(B) வாய்மை என்பது சிறந்த அறமா?

(C) சங்க இலக்கியங்கள் சிறந்ததா?

(D) வாய்மையைச் சிறந்த அறமாக எந்த இலக்கியங்கள் பேசுகின்றன?

(E) விடை தெரியவில்லை

45. வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் கூறு :

வாழ்

(A) வாழ்ந்த

(B) வாழ்ந்து

(C) வாழ்க்கை

(D) வாழா

(E) விடை தெரியவில்லை

46. வினா வகைகளைக் கண்டறி :

"வீட்டில் அரிசி இல்லை" "நீ கடைக்குச் செல்கிறாயா?" என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல்

(A) ஐயவினா

(B) அறிவினா

(C) அறியாவினா

(D) ஏவல்வினா

(E) விடை தெரியவில்லை

47. மரபுத் தொடரின் பொருளை அறிக.

பச்சைப்பொய்

(A) பேச்சில் பொய்

(B) உண்மையற்ற பொய்

(C) ஏமாற்றுதல்

(D) முற்றிலும் பொய்

(E) விடை தெரியவில்லை

48. பொருந்தாச் சொல்லை எடுத்தெழுதுக.

முதல்நிலைத் தொழிற்பெயர் அல்லாதது

(A) பெறு

(B) சுடு

(C) நடு

(D) வீடு

(E) விடை தெரியவில்லை

49. சரியான பொருளை அறிக.

அவிர்தல்

(A) அழித்தல்

(B) நீக்குதல்

(C) ஒளிர்தல்

(D) உயர்தல்

(E) விடை தெரியவில்லை

50. சொல்வகை அறிந்து பொருந்தாச் சொல்லை எழுதுக.

(A) சென்றாள்

(B) வந்த

(C) சித்திரை

(D) நடந்து

(E) விடை தெரியவில்லை

51. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) அரசர்கள் நல்லாட்சி செய்தார்.
(B) பசு கன்றை ஈன்றன.
(C) மேகங்கள் சூழ்ந்து கொண்டது.
(D) குழலி நடனம் ஆடினாள்
(E) விடை தெரியவில்லை

52. தவறான இணையைத் தேர்ந்தெடு

(A) ஊட்டி – உதக மண்டலம்
(B) நாகை – நாகப்பட்டினம்
(C) உதகை – உதக மண்டலம்
(D) மயிலை – மயிலாடுதுறை
(E) விடை தெரியவில்லை

53. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல் :

சரியான இணையைத் தேர்ந்தெடு :

(A) இம்சை – இடறல்
(B) இம்சை – இன்பம்
(C) இம்சை – துன்பம்
(D) இம்சை – இழிவு
(E) விடை தெரியவில்லை

54. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல் :

சரியான இணையைத் தேர்ந்தெடு :

(A) கிரீடம் – மணியழகு
(B) கிரீடம் – மணிமுடி
(C) கிரீடம் – பொன்
(D) கிரீடம் – மணி
(E) விடை தெரியவில்லை

55. அயோத்திதாசர் நடத்திய வார இதழினைத் தேர்ந்தெடுக்க :

(A) ஒரு பைசாத் தமிழன்

(B) இரண்டு பைசாத் தமிழன்

(C) காலணாத் தமிழன்

(D) அரையணாத் தமிழன்

(E) விடை தெரியவில்லை

56. 'தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்'. எவ்வகையான தொடர்?

(A) தன்வினைத் தொடர்

(B) பிறவினைத் தொடர்.

(C) உணர்ச்சித் தொடர்

(D) கட்டளைத் தொடர்

(E) விடை தெரியவில்லை

57. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல்.

சரியான இணையைத் தேர்ந்தெடு

(A) ஆஸ்தி – செல்வம்

(B) ஆஸ்தி – சொத்து

(C) ஆஸ்தி – பணம்

(D) ஆஸ்தி – வருமானம்

(E) விடை தெரியவில்லை

58. சரியான தொடரை அறிக :

(A) பசுக் குவியல் மேய்ந்து சென்றன

(B) பழக் கொத்துக் காய்த்துத் தொங்கியது

(C) தென்னந்தோப்பில் தேங்காய்கள் கிடந்தன

(D) ஆட்டுக் கூட்டத்தைப் பட்டியில் அடைத்தனர்

(E) விடை தெரியவில்லை

59. பொருளைத் தேர்ந்தெடு :

'கல்லில் நார் உரித்தல்'

(A) ஆராய்ந்து பாராமல் செய்தல்

(B) இருப்பது போல் தோன்றும்; ஆனால் இருக்காது

(C) இயலாத காரியம்

(D) நீண்ட காலமாக இருப்பது

(E) விடை தெரியவில்லை

60. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு :

கண்ணி என்பதன் விளக்கம் ——————

(A) யாது

(B) எவை

(C) யாவை

(D) எது

(E) விடை தெரியவில்லை

61. பொருத்தமான காலம் அமைத்தல் :

'அப்துல் கலாமின் சுய சரிதையை நான் படிப்பேன்'.

(A) இறந்தகாலம்

(B) எதிர்காலம்

(C) நிகழ்காலம்

(D) வசந்தகாலம்

(E) விடை தெரியவில்லை

62. நிறுத்தற்குறிகளை அறிதல்.

சரியான நிறுத்தற்குறிகள் இடப்பட்ட தொடரைக் கண்டுபிடிக்க.

(A) இல்ல சார், அவனை விடக் கூடாது சார் என்றான்.

(B) இல்ல சார்! அவனை விடக்கூடாது சார் என்றான்?

(C) “இல்ல சார், அவனை விடக்கூடாது சார்!” என்றான்.

(D) ‘இல்ல சார் அவனை விடக் கூடாது சார் என்றான்!

(E) விடை தெரியவில்லை

63. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக :

புதுக்கோட்டை

(A) புதுவை

(B) புதுகை

(C) புதுமை

(D) புதூர்

(E) விடை தெரியவில்லை

64. பொருத்தமான காலம் அமைத்தல் :

சரியான தொடரைத் தேர்ந்தெடு

(A) குமரன் உணவு உண்டான் (இறந்தகாலம்)

(B) குமரன் உணவு உண்பான் (நிகழ்காலம்)

(C) குமரன் உணவு உண்கிறான் (எதிர்காலம்)

(D) குமரன் உணவு உண்ணச் செல்கிறான் (எதிர்காலம்)

(E) விடை தெரியவில்லை

65. எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிக :

(A) பேரன் பேத்தியோட சந்தோசமா இருக்கேன்

(B) பெயரன் பெயர்த்தி உடன் மகிழ்ச்சியாக இருக்கிறேன்

(C) பெயரன் பேத்தி உடன் சந்தோசமாக இருக்கேன்

(D) பேரன் பெயர்த்தி உடன் மகிழ்ச்சியாக இருக்கேன்

(E) விடை தெரியவில்லை

66. நிறுத்தற் குறிகளை அறிதல் :

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை

(A) சேரர்களின், பட்டப்பெயர்களில், கொல்லி வெற்பன், மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை

(B) சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி, வெற்பன், மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை

(C) சேரர்களின் பட்டப்பெயர்களில், கொல்லி, வெற்பன் மலையமான், போன்றவை குறிப்பிடத்தக்கவை.

(D) சேரர்களின், பட்டப்பெயர்களில் கொல்லி, வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

(E) விடை தெரியவில்லை

67. சரியான கலைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க :

Cultural Values

(A) பண்பாட்டு எல்லைகள்

(B) பண்பாட்டு நிகழ்ச்சிகள்

(C) பண்பாட்டு விழுமியங்கள்

(D) பண்பாட்டு ஆதாரங்கள்

(E) விடை தெரியவில்லை

68. கலைச்சொல்லைப் பொருத்துக :

(a) Classical literature — 1. நவீன இலக்கியம்

(b) Devotional literature — 2. நாட்டுப்புற இலக்கியம்

(c) Folk literature — 3. செவ்விலக்கியம்

(d) Modern literature — 4. பக்தி இலக்கியம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

69. இருபொருள் தருக :

தாமம்

(A) குணம், தகுதி
(B) அழுதல், பின்னுதல்
(C) கயிறு, பூமாலை
(D) கீற்று, கயிறு
(E) விடை தெரியவில்லை

70. சரியான இணையைத் தேர்ந்தெடு :

மெய்

(A) பொருள், உடல்
(B) உண்மை, மாலை
(C) உண்மை, உடல்
(D) உடல், வலிமை
(E) விடை தெரியவில்லை

71. சரியான இணையைத் தேர்ந்தெடு :

பரவை

(A) வேழம், கடல்
(B) ஞானம், இசை
(C) ஊர், ஆழி
(D) இசை, கடல்
(E) விடை தெரியவில்லை

72. ஒருமை பன்மை பிழையுள்ள தொடரைக் குறிப்பிடுக :

(A) காட்டில் மாடுகள் மேய்ந்தன
(B) சோலையில் மான் துள்ளி விளையாடியது
(C) ஓர் அணில் மரத்தில் தாவி ஓடின
(D) பூச்செடியில் பூ மலர்ந்திருந்தது
(E) விடை தெரியவில்லை

73. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) பெண்கள் எல்லாத்துறையிலும் பணிபுரிகின்றாள்
(B) பெண்கள் எல்லாத்துறையிலும் பணிபுரிகின்றன
(C) பெண்கள் எல்லாத்துறையிலும் பணிபுரிகின்றது
(D) பெண்கள் எல்லாத்துறையிலும் பணிபுரிகின்றனர்
(E) விடை தெரியவில்லை

74. பிழை திருத்துதல் : (ஒரு – ஓர்)

கீழ்க்காணும் தொடர்களில் ஒரு – ஓர் சரியாக அமைந்த தொடர் எது?

(A) அது ஒரு இனிய பாடல்
(B) அஃது ஒரு இனிய பாடல்
(C) அது ஒரு பழைய பாடல்
(D) அது ஓர் பழைய பாடல்
(E) விடை தெரியவில்லை

75. பொருத்தமான காலம் அமைத்தல்

சரியான காலத்தை தேர்ந்தெடு :

(A) கடந்துச் சென்றான் (இறந்தகாலம்)
(B) கடந்துச் செல்வான் (நிகழ்காலம்)
(C) கடந்துச் செல்கிறான் (இறந்தகாலம்)
(D) கடந்துச் செல்லச் செய்வான் (நிகழ்காலம்)
(E) விடை தெரியவில்லை

76. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (இயற்கை)

(A) நாம் ———— உரங்கள் தயாரித்து உழவர்களுக்கு வழங்க வேண்டும்
(B) நாம் ———— உரங்கள் தவிர்த்து நில வளம் காப்போம்
(C) நாம் உரங்கள் ———— தயாரித்து உழவர்களுக்கு வழங்க வேண்டும்
(D) ———— உரங்கள் உழவர்களுக்குத் தயாரித்து நாம் வழங்க வேண்டும்
(E) விடை தெரியவில்லை

77. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல் (ஒலி மரபு)

பசு

(A) கதறும்
(B) உறுமும்
(C) கத்தும்
(D) பிளிறும்
(E) விடை தெரியவில்லை

78. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல் (ஒலிமரபு)

யானை

(A) உறுமும்
(B) கதறும்
(C) பிளிறும்
(D) முழங்கும்
(E) விடை தெரியவில்லை

79. ஒரு பொருள் தரும் இரு சொற்கள் தருக.

கோ

(A) ஆ, பசு
(B) வேந்தன், அரசன்
(C) பாடல், பண்
(D) இசை, புகழ்
(E) விடை தெரியவில்லை

80. பொருள் வேறுபாடறிந்து எழுதுக.

போரில் பயன்படுத்தியது ——————

(A) வால்
(B) வாழ்
(C) வாள்
(D) வான்
(E) விடை தெரியவில்லை

81. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு.

கண்ணனை —————— அடித்துச் சென்றது.

(A) வெல்லம்
(B) வெள்ளம்
(C) வெழ்ழம்
(D) பள்ளம்
(E) விடை தெரியவில்லை

82. பொருள் வேறுபாடு அறிந்து பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | இலை | 1. | மெலிந்து போதல் |
| (b) | இளை | 2. | நூல் இழை |
| (c) | இழை | 3. | செடியின் இலை |
| (d) | கழை | 4. | மூங்கில் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

83. தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.

விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க :

(A) தப்பாட்டம் என்றால் என்ன?

(B) பல்வேறு ஆட்டக்கூறுகள் யாவை?

(C) தப்பாட்டம் எவ்வகையான சூழலில் ஆடப்படும்?

(D) எந்த ஆட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது?

(E) விடை தெரியவில்லை

84. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக :

'Tempest'

(A) பெருங்காற்று

(B) நிலக்காற்று

(C) கடற்காற்று

(D) சுழல்காற்று

(E) விடை தெரியவில்லை

85. சரியான ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக :

(A) உதக மண்டலம் – உதவை

(B) கோயம்புத்தூர் – கோயவை

(C) திருநெல்வேலி – நெல்லை

(D) சைதாப்பேட்டை – சைதா

(E) விடை தெரியவில்லை

86. உவமைகளால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல் :

"விழலுக்கு இறைத்த நீர் போல" – உவமை கூறும் பொருளைக் கூறுக.

(A) எதிர்பாரா நிகழ்வு

(B) பயனற்ற செயல்

(C) தற்செயல் நிகழ்வு

(D) வெளிப்படைத் தன்மை

(E) விடை தெரியவில்லை

87. செய்வினைத் தொடரைக் கண்டறிக :

(A) குமுதா பாடாதே

(B) குமுதா பாடி மகிழ்ந்தாள்

(C) குமுதாவால் பாடப்பட்டது

(D) குமுதா பாடி மகிழ்வித்தாள்

(E) விடை தெரியவில்லை

88. வேர்ச்சொல்லில் தொழிற் பெயர் காண்க.

'பெறு'

(A) பெற்றவன்
(B) பெற்ற
(C) பெற்று
(D) பெறுதல்
(E) விடை தெரியவில்லை

89. சேர்த்தெழுதுதல்

தூக்கி + கொண்டு

(A) தூக்கிகொண்டு
(B) தூக்குக் கொண்டு
(C) தூக்கிக் கொண்டு
(D) தூக்கு கொண்டு
(E) விடை தெரியவில்லை

90. எறிந்தான் – வேர்ச்சொல்லைத் தருக.

(A) எறிந்த
(B) எறிதல்
(C) எறி
(D) எறிந்து
(E) விடை தெரியவில்லை

91. வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க – 'பொறு'

(A) பொறுத்தவர்
(B) பொறுத்தல்
(C) பொறுத்து
(D) பொறுத்தார்
(E) விடை தெரியவில்லை

92. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.

காலிங்பெல் (Calling Bell) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

(A) மணியடிதல்
(B) ஒலித்தல்
(C) அழைத்தல்
(D) அழைப்பு மணி
(E) விடை தெரியவில்லை

93. சேர்த்தெழுதுதல்.

விழித்து + எழும்

(A) விழியெழும்
(B) விழித்தெழும்
(C) விழித்தழும்
(D) விழித்து எழும்
(E) விடை தெரியவில்லை

94. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிக.

நெற்கதிர்கள் ———————— நிலத்தில், கரும்பு ————————னர்.

(A) விளைத்த, விளைந்த
(B) விலைந்த, விளைத்த
(C) விளைந்த, விளைவித்தனர்
(D) விளைத்த, விலைந்த
(E) விடை தெரியவில்லை

95. சரியான தொடரைத் தேர்ந்தெடு.

சேர்ந்து – சேர்த்து

(A) சுற்றத்தார் சேர்ந்து வாழ்ந்தனர். பிரிந்திருந்த கணவன் மனைவியரைச் சேர்த்து வைத்தனர்
(B) சுற்றத்தார் சேர்த்து வாழ்ந்தனர். பிரிந்திருந்த கணவன் மனைவியரைச் சேர்த்து வைத்தனர்
(C) சுற்றத்தார் சேர்ந்து வாழ்ந்தனர். பிரிந்திருந்த கணவன் மனைவியரைச் சேர்ந்து வைத்தனர்
(D) சுற்றத்தார் சேர்த்து வாழ்ந்தனர். பிரிந்திருந்த கணவன் மனைவியரைச் சேர்ந்து வைத்தனர்
(E) விடை தெரியவில்லை

96. சரியான தொடரைத் தேர்ந்தெடு.

மாறு – மாற்று

(A) மறைமலை அடிகள், அனைவரும் தூய தமிழில் எழுதுமாற்று வழிகாட்டி மாற்றினார்.
(B) மறைமலை அடிகள், அனைவரும் தூய தமிழில் எழுதுமாறு வழிகாட்டி மாறினார்.
(C) மறைமலை அடிகள் அனைவரும் தூய தமிழில் எழுதுமாறு வழிகாட்டி மாற்றினார்.
(D) மறைமலை அடிகள் அனைவரும் தூய தமிழில் எழுதுமாற்று வழிகாட்டி மாற்றினார்
(E) விடை தெரியவில்லை

97. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) உந்து, உரு, ஊழி, ஊண்

(B) உரு, ஊழி, ஊழ், உந்து

(C) ஊழி, ஊழ், உந்து, உரு

(D) உந்து, ஊழி, உரு, ஊழ்

(E) விடை தெரியவில்லை

98. அகர வரிசையில் எழுதுக.

(A) ஒழுக்கம், உயிர், ஆடு, அலை

(B) முந்நீர், மனத்துயர், மீமிசை, மேடுபள்ளம்

(C) உயிர், ஒழுக்கம், அலை, ஆடு

(D) அலை, ஆடு, உயிர், ஒழுக்கம்

(E) விடை தெரியவில்லை

99. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) மாளாத வாளால் ஆளா மீளா

(B) ஆளா மீளா மாளாத வாளால்

(C) ஆளா மாளாத மீளா வாளால்

(D) வாளால் ஆளா மீளா மாளாத

(E) விடை தெரியவில்லை

100. திணை வழுவை தேர்வு செய்க.

(A) செழியன் வந்தது

(B) செழியன் வந்தார்

(C) செழியன் வருவார்

(D) செழியன் வந்தான்

(E) விடை தெரியவில்லை

## பகுதி-ஆ — பொது அறிவு (பட்டப்படிப்பு தரம்)

## Part-B — General Studies (Degree Standard)

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 101–200 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| **Questions** | **: 101–200** | **Total Marks** | **: 150** |

101. If BAT = 23, CAT = 24. Which number is denoted by BOY?

(A) 42 (B) 24
(C) 23 (D) 41
(E) Answer not known

BAT = 23, CAT = 24 என்றால் BOY என்பது எதைக் குறிக்கும்?

(A) 42 (B) 24
(C) 23 (D) 41
(E) விடை தெரியவில்லை

102. If $A, B, C, D, E, F, G, H$ is equal to the numbers 2, 4, 6, 8, 10, 12, 14, 16 respectively then find the value of $\left(F \div \sqrt{B}\right) + \left(\sqrt{A} \times \sqrt{D}\right)$.

(A) $E$
(B) $F$
(C) $G$
(D) $H$
(E) Answer not known

$A, B, C, D, E, F, G, H$ என்ற ஆங்கில எழுத்துக்கள் முறையே 2, 4, 6, 8, 10, 12, 14, 16 என்ற எண்களை குறிக்கின்றன எனில், $\left(F \div \sqrt{B}\right) + \left(\sqrt{A} \times \sqrt{D}\right)$ ன் மதிப்பை காண்க.

(A) $E$
(B) $F$
(C) $G$
(D) $H$
(E) விடை தெரியவில்லை

103. A works 3 times as fast as B and is able to complete a task in 24 days less than the days taken by B. Find the time in which they can complete the work together.

(A) 9 days
(B) 12 days
(C) 3 days
(D) 6 days
(E) Answer not known

A ஆனவர் B ஐ காட்டிலும் 3 மடங்கு வேகமாக ஒரு வேலையை செய்து முடிப்பார். அவரால் அந்தப் பணியை B எடுத்துக் கொண்ட நேரத்தை விட 24 நாட்கள் குறைவாக எடுத்து முடிக்க முடிகிறது. இருவரும் சேர்ந்து அந்த வேலையை முடிக்க ஆகும், நேரத்தை காண்க.

(A) 9 நாட்கள்
(B) 12 நாட்கள்
(C) 3 நாட்கள்
(D) 6 நாட்கள்
(E) விடை தெரியவில்லை

104. If "ZGP" stands for "WIN" then "VMR" stands for

(A) WLS
(B) SOP
(C) UPQ
(D) TAP
(E) Answer not known

"ZGP" என்பது "WIN" என்ற வார்த்தையை குறித்தால், "VMR" என்பது குறிக்கும் சொல்

(A) WLS
(B) SOP
(C) UPQ
(D) TAP
(E) விடை தெரியவில்லை

105. Find the diameter of a sphere whose surface area is 154 $m^2$.

(A) 7 m

(B) 4 m

(C) 6 m

(D) 9 m

(E) Answer not known

ஒரு கோளத்தின் புறப்பரப்பு 154 ச.மீ. எனில், அதன் விட்டம் காண்க.

(A) 7 மீ

(B) 4 மீ

(C) 6 மீ

(D) 9 மீ

(E) விடை தெரியவில்லை

106. Find the compound interest on ₹ 15,625 at the rate of 8% per annum for 3 years.

(A) ₹ 4063

(B) ₹ 4508

(C) ₹ 4058

(D) ₹ 4085

(E) Answer not known

₹ 15,625 க்கு ஆண்டு வட்டி 8% வீதம் எனில் 3 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டு வட்டியைக் காண்க.

(A) ₹ 4063

(B) ₹ 4508

(C) ₹ 4058

(D) ₹ 4085

(E) விடை தெரியவில்லை

107. The mean of $a$, $b$, $c$, $d$ and $e$ is 28. If the mean of $a$, $c$ and $e$ is 24, then the mean of $b$ and $d$ is

(A) 24

(B) 36

(C) 26

(D) 34

(E) Answer not known

$a$, $b$, $c$, $d$ மற்றும் $e$ இன் சராசரி 28. $a$, $c$ மற்றும் $e$ இன் சராசரி 24, எனில் $b$ மற்றும் $d$ இன் சராசரி

(A) 24

(B) 36

(C) 26

(D) 34

(E) விடை தெரியவில்லை

108. Value of a machine depreciates 10% p.a. If the present value is ₹ 16,000 after how many years it will worth half the present value.

(A) 2 years

(B) 3 years

(C) 4 years

(D) 5 years

(E) Answer not known

₹ 16,000 தற்போதைய மதிப்புள்ள ஓர் இயந்திரம் தன் மதிப்பில் ஆண்டுக்கு 10% குறைந்தால், எத்தனை ஆண்டுகளில் அது தற்போதைய மதிப்பில் பாதி மதிப்பாகும்?

(A) 2 ஆண்டுகள்

(B) 3 ஆண்டுகள்

(C) 4 ஆண்டுகள்

(D) 5 ஆண்டுகள்

(E) விடை தெரியவில்லை

109. The ratio of ₹ 1 to 20 paise is

(A) 1 : 5
(B) 1 : 2
(C) 2 : 1
(D) 5 : 1
(E) Answer not known

₹ 1-க்கும் 20 பைசாவுக்கும் உள்ள விகிதம்

(A) 1 : 5
(B) 1 : 2
(C) 2 : 1
(D) 5 : 1
(E) விடை தெரியவில்லை

110. There are four mobile phones in a house. At 5 a.m. all the four mobile phones will ring together. Thereafter, the first one rings every 15 minutes, the second one rings every 20 minutes, the third one rings every 25 minutes and the fourth one rings every 30 minutes. At what time, will the four mobile phones ring together again?

(A) 7 a.m.
(B) 8 a.m.
(C) 9 a.m.
(D) 10 a.m.
(E) Answer not known

ஒரு வீட்டில் நான்கு அலைபேசிகள் உள்ளன. காலை 5 மணிக்கு, எல்லா அலைபேசிகளும் ஒன்றாக ஒலிக்கும். அதன்பின், முதல் அலைபேசியானது ஒவ்வொரு 15 நிமிடங்களிலும் இரண்டாவது அலைபேசியானது ஒவ்வொரு 20 நிமிடங்களிலும் மூன்றாவது அலைபேசியானது ஒவ்வொரு 25 நிமிடங்களிலும் மற்றும் நான்காவது அலைபேசியானது ஒவ்வொரு 30 நிமிடங்களிலும் ஒலிக்கின்றன எனில், அவை மீண்டும் எப்போது ஒன்றாக ஒலிக்கும்?

(A) காலை 7 மணி
(B) காலை 8 மணி
(C) காலை 9 மணி
(D) காலை 10 மணி
(E) விடை தெரியவில்லை

111. GCD of any two prime numbers is

(A) −1
(B) 0
(C) 1
(D) 2
(E) Answer not known

இரண்டு பகா எண்களின் மீ.பொ.வ.

(A) −1
(B) 0
(C) 1
(D) 2
(E) விடை தெரியவில்லை

112. 12% of 250 litre is the same as ———— of 150 litre

(A) 30%
(B) 20%
(C) 15%
(D) 10%
(E) Answer not known

250 லிட்டரின் 12% என்பது 150 லிட்டரின் ———— க்குச் சமமாகும்.

(A) 30%
(B) 20%
(C) 15%
(D) 10%
(E) விடை தெரியவில்லை

113. There are 560 students in a school. Out of 560 students, 320 are boys. Find the percentage of girls in that school?

(A) 41%
(B) 42.86%
(C) 43.8%
(D) 44%
(E) Answer not known

ஒரு பள்ளியில் 560 மாணவர்கள் உள்ளனர். அதில் 320 பேர் சிறுவர்கள் எனில், அந்தப் பள்ளியிலுள்ள சிறுமிகளின் சதவீதத்தைக் கண்டறியவும்.

(A) 41%
(B) 42.86%
(C) 43.8%
(D) 44%
(E) விடை தெரியவில்லை

114. Match the following

| | | | |
|---|---|---|---|
| (a) | IIPGCMS | 1. | e - governance and security |
| (b) | CERT - TN | 2. | Business credit for MSMEs |
| (c) | ECLGS | 3. | Rejuvenate rural Industries |
| (d) | TNRTP | 4. | Helpline Management System |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) Answer not known

பின்வருவனவற்றை பொருத்தவும்.

| | | | |
|---|---|---|---|
| (a) | IIPGCMS | 1. | மின் ஆளுமை மற்றும் பாதுகாப்பு |
| (b) | CERT - TN | 2. | MSMEக்கான தொழில் கடன் |
| (c) | ECLGS | 3. | கிராமப்புற தொழில்களுக்கு புத்துயிர் |
| (d) | TNRTP | 4. | உதவி மைய மேலாண்மை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

115. The Tamil language was introduced as a medium of instruction in the college of Tamilnadu in the year

(A) 1980 (B) 1972

(C) 1982 (D) 1970

(E) Answer not known

தமிழக கல்லூரிகளில் தமிழை பயிற்று மொழியாக அறிமுகப்படுத்திய ஆண்டு

(A) 1980 (B) 1972

(C) 1982 (D) 1970

(E) விடை தெரியவில்லை

116. What is the name of the Digital Life Certificate for Pensioners?

(A) Jeevan Jyoti

(B) Jeevan Pramaan

(C) Indra Dhanush

(D) NITI Aayog

(E) Answer not known

ஓய்வூதியதாரர்களுக்கான மின்னணு ஆயுள் சான்றிதழின் பெயர் என்ன?

(A) ஜீவன் ஜோதி

(B) ஜீவன் பிரமாண்

(C) இந்திர தனுஷ்

(D) நிதி ஆயோக்

(E) விடை தெரியவில்லை

117. The total percentage of reservation given in Tamilnadu

(A) 69

(B) 67

(C) 68

(D) 70

(E) Answer not known

தமிழகத்தில் உள்ள மொத்த இட ஒதுக்கீடு ———— சதவீதம்

(A) 69

(B) 67

(C) 68

(D) 70

(E) விடை தெரியவில்லை

118. The Stree Shakti Scheme was introduced by ———— government to empower rural women economically.

(A) Tamilnadu

(B) Kerala

(C) Karnataka

(D) Andhra Pradesh

(E) Answer not known

கிராமப்புற பெண்கள் பொருளாதார ரீதியில் அதிகாரமடைத்தலுக்கென, ஸ்திரி சக்தி திட்டம், ———— மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

(A) தமிழ்நாடு

(B) கேரளா

(C) கர்நாடகா

(D) ஆந்திர பிரதேசம்

(E) விடை தெரியவில்லை

119. Among the following who participated in the first Anti Hindi Agitation of 1937–40.

(A) Padmavathy Ashar

(B) Leelavathy

(C) Rukmani Lakshmipathy

(D) Muvalur Ramamirtham

(E) Answer not known

1937–40ல் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர் யார் என்பதைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

(A) பத்மாவதி ஆஷார்

(B) லீலாவதி

(C) ருக்மணி இலக்ஷ்மிபதி

(D) மூவலூர் இராமமிர்தம்

(E) விடை தெரியவில்லை

120. Early name of the Justice Party was

(A) Madras Mahajana Sabha

(B) Madras Native Association

(C) South Indian Liberal Federation

(D) Dravidar kazhagam

(E) Answer not known

ஜஸ்டிஸ் கட்சியின் முந்தைய பெயர்

(A) மதராஸ் மகாஜன சபை

(B) மதராஸ் நேட்டிவ் அசோசியேஷன்

(C) தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பு

(D) திராவிடர் கழகம்

(E) விடை தெரியவில்லை

121. Match List I with List II and select the correct answer using the codes given below :

| List I<br>Freedom Fighters | | List II<br>Birth place | |
|---|---|---|---|
| (a) | Chenbagaraman | 1. | Sengottai |
| (b) | Madasamy | 2. | Vathalagundu |
| (c) | Vanchinathan | 3. | Nanjilnadu |
| (d) | Subramaniya Siva | 4. | Ottapidaram |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) Answer not known

பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையை தெரிவு செய்க.

| பட்டியல் I<br>சுதந்திர போராட்ட வீரர்கள் | | பட்டியல் II<br>பிறந்த இடம் | |
|---|---|---|---|
| (a) | செண்பகராமன் | 1. | செங்கோட்டை |
| (b) | மாடசாமி | 2. | வத்தலகுண்டு |
| (c) | வாஞ்சிநாதன் | 3. | நாஞ்சில்நாடு |
| (d) | சுப்ரமணிய சிவா | 4. | ஓட்டபிடாரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

122. According to Thiruvalluvar those who do not have good humane nature are compared to

(A) a skeleton covered by skin

(B) a tree

(C) a body without soul

(D) an animal

(E) Answer not known

மக்கட் பண்பு இல்லாதவர்கள் எதற்குச் சமமானவர்கள்? என்கிறார் வள்ளுவர்.

(A) எலும்புதோல் போர்த்தவர்

(B) மரம் போன்றவர்

(C) நடை பிணம் போன்றவர்

(D) விலங்கு போன்றவர்

(E) விடை தெரியவில்லை

123. What will be the sweetest one to those who have not heard the words of a baby according to Thiruvalluvar?

(A) Music of Flute, music of Yaazh (Yazhisai)

(B) Music of Flute, music of Drums

(C) Music of Yazh, music of Veena

(D) Music of Veena, music of Flute

(E) Answer not known

வள்ளுவர் கூற்றுப்படி மழலைச் சொல் கேளாதவர் எவற்றை இனிது என்பார்கள்?

(A) குழலிசை, யாழிசை

(B) குழலிசை, மத்தள இசை

(C) யாழிசை, வீணையிசை

(D) வீணையிசை, குழலிசை

(E) விடை தெரியவில்லை

124. Identify the writers who are referred to as the 'Kathi' of Tamil.

(A) Elango, Pugazhendhi

(B) Kambar, Thiruvalluvar

(C) Aavaiyar, Paranar

(D) Kapilar, Paranar

(E) Answer not known

தமிழுக்கு "கதி" என்று அழைக்கப்படுபவர்கள்

(A) இளங்கோ, புகழேந்தி

(B) கம்பர், திருவள்ளுவர்

(C) ஔவையார், பரணர்

(D) கபிலர், பரணர்

(E) விடை தெரியவில்லை

125. Who among the Kadai elu vallal offered horses to the needy people?

(A) Athiyamaan

(B) Paari

(C) Kaari

(D) Aai andiran

(E) Answer not known

இரவலர்க்குக் குதிரைகள் நல்கிய கடையெழு வள்ளல் யார்?

(A) அதியமான்

(B) பாரி

(C) காரி

(D) ஆய்அண்டிரன்

(E) விடை தெரியவில்லை

126. Where are the earliest Republic of Roman coins available in Tamilnadu?

(A) Chennai
(B) Karur
(C) Madurai
(D) Thanjavur
(E) Answer not known

தமிழகத்தில் எவ்விடத்தில் ரோமானிய குடியரசு காசுகள் கிடைத்தன?

(A) சென்னை
(B) கரூர்
(C) மதுரை
(D) தஞ்சாவூர்
(E) விடை தெரியவில்லை

127. The inhabitants of Marudam lands were :

(A) Kuravar
(B) Ulavar
(C) Idayar
(D) Ayar
(E) Answer not known

மருத குலத்தில் வாழும் மக்கள்

(A) குறவர்
(B) உழவர்
(C) இடையர்
(D) ஆயர்
(E) விடை தெரியவில்லை

128. Which one of the following journal not started and associated with Mahatma Gandhi?

(A) Indian opinion
(B) Young India
(C) Navajeevan
(D) Hindustan times
(E) Answer not known

கீழ்கண்ட பத்திரிக்கைகளில் மகாத்மா காந்தி ஆரம்பிக்காத அவரோடு தொடர்பற்ற பத்திரிக்கை எது?

(A) இந்தியன் ஒப்பினியன்
(B) எங் இந்தியா
(C) நவஜீவன்
(D) ஹிந்துஸ்தான் டைம்ஸ்
(E) விடை தெரியவில்லை

129. How did V.O. Chidambaram attracted the attention of the British?

(A) V.O.C. reestablished the maritime glory of the past

(B) Sold the shares of the Steam Navigation Company

(C) V.O.C. turned the public opinion infavour of the Swadeshi Movement

(D) Launched a Swadeshi Steam Navigation Company

(E) Answer not known

ஆங்கிலேயர்கள் தங்கள் கவனத்தை வ.உ. சிதம்பரம் பெயரில் செலுத்தக் காரணம் எது?

(A) வ.உ.சி. கடல் கடந்த வாணிபத்தின் பண்டைய பெருமையை மீண்டும் ஏற்படுத்தினார்

(B) நீராவி கப்பல் கம்பெனியின் பங்குகளை விற்றார்

(C) வ.உ.சி. மக்களின் கவனத்தை சுதேசி இயக்கத்தின்பால் ஈர்த்தார்

(D) சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை தொடங்கினார்

(E) விடை தெரியவில்லை

130. ———— was the uncle of Bhagat Singh who founded the "Revolutionary Bharat Mata Society".

(A) Arjun Singh

(B) Ajit Singh

(C) Balbir Singh

(D) Kuldeep Singh

(E) Answer not known

———— என்பவர் பகத்சிங்-ன் மாமா மற்றும் பாரத மாதா கழகம் என்ற அமைப்பை தோற்றுவித்தவராவார்.

(A) அர்ஜுன் சிங்

(B) அஜித் சிங்

(C) பல்பீர் சிங்

(D) குல்தீப் சிங்

(E) விடை தெரியவில்லை

131. Founder of the Swaraj Party

(A) Bala Gangadhara Tilak
(B) Chittaranjan Dass and Motilal Nehru
(C) Bipin Chandra Pal
(D) Annie Besant
(E) Answer not known

சுயராஜ்ய கட்சியை ஆரம்பித்தவர்

(A) பால கங்காதர திலகர்
(B) சித்தரஞ்சன் தாஸ் மற்றும் மோதிலால் நேரு
(C) பிபின் சந்திர பால்
(D) அன்னி பெசண்ட்
(E) விடை தெரியவில்லை

132. Which Five Year Plan has the vision and strategy to "Achieve faster, sustainable and more inclusive growth"?

(A) Tenth plan
(B) Twelfth plan
(C) Ninth plan
(D) Eighth plan
(E) Answer not known

எந்த ஐந்தாண்டுத் திட்டமானது "விரைவான நிலையான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி" என்பதை நோக்கம் மற்றும் உத்தியாகக் கொண்டிருந்தது?

(A) 10வது திட்டம்
(B) 12வது திட்டம்
(C) 9வது திட்டம்
(D) 8வது திட்டம்
(E) விடை தெரியவில்லை

133. Which of the following is not an instrument of Agriculture price policy?

(A) Buffer stocks

(B) Support prices

(C) Procurement prices

(D) Credit facility to farmers

(E) Answer not known

பின்வருவனவற்றுள் எது விவசாய பொருட்களின் விலைக் கொள்கை கருவிகள் இல்லை?

(A) இடையக பங்கு

(B) ஆதரவு விலைகள்

(C) கொள்முதல் விலைகள்

(D) விவசாயிகளுக்கு கடன் வசதி செய்து தருதல்

(E) விடை தெரியவில்லை

134. The grants - in - aid are given to the states for

(A) Maintaining cordial Centre-State relation

(B) Covering routine gaps in state budgets

(C) To finance state plans

(D) Assisting states to undertake development activities and welfare schemes

(E) Answer not known

மானிய உதவி மாநிலங்களுக்கு வழங்கப்படுவது ஏன்?

(A) மத்திய–மாநிலங்களுக்கு இடையே நல்ல உறவுகளை பராமரித்தல்

(B) மாநில வரவு செலவுத் திட்டங்களில் வழக்கமான இடைவெளிகளை நிரப்புவதற்காக

(C) மாநில திட்டங்களுக்கு நிதியளிக்க

(D) அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநிலங்களுக்கு உதவுதல்

(E) விடை தெரியவில்லை

135. Who described Indian Constitution as Co - Operative Federalism?

(A) Granville Austin

(B) Dr. B.R. Ambedkar

(C) Jawaharlal Nehru

(D) D.C. Wheree

(E) Answer not known

இந்திய கூட்டாட்சி முறையை 'கூட்டுறவுக் கூட்டாட்சி' என விவரித்தவர் யார்?

(A) கிரான்வில் ஆஸ்டின்

(B) டாக்டர். பி.ஆர். அம்பேத்கர்

(C) ஜவஹர்லால் நேரு

(D) D.C. வேரீ

(E) விடை தெரியவில்லை

136. Which one of the following is not the duty of every citizen?

(A) To abide by the constitution and represent the ideas and institution National flag and National Anthem

(B) To uphold and protect the sovereignty, unity and integrity of India

(C) To defend the country and render national service when called upon to do so

(D) To do compulsory military service

(E) Answer not known

கீழ்கண்டவற்றுள் எது ஒரு குடிமகனின் கடமையல்ல?

(A) அரசியலமைப்புக்கு ஏற்ப நடந்து அதனுடைய கோட்பாடுகள் நிறுவனங்கள், தேசிய கொடி மற்றும் தேசிய கீதம் ஆகியவற்றை மதித்து நடத்தல்

(B) இந்தியாவின் இறைமை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை பேணி பாதுகாக்க வேண்டும்

(C) தேவைப்படும் போது எல்லாம் நாட்டை பாதுகாப்பதும், நாட்டுக்கு சேவை செய்யவும் வேண்டும்

(D) கட்டாய இராணுவ சேவை செய்ய வேண்டும்

(E) விடை தெரியவில்லை

137. Match the following Committees on Panchayat Raj with their Chair persons.

| Committee | | Chairman | |
|---|---|---|---|
| (a) | Panchayat Raj elections | 1. | G. Ramachandran |
| (b) | Panchayat Raj Training centres | 2. | V.R. Rao |
| (c) | Community development and Panchayat Raj | 3. | K. Santhanam |
| (d) | Rationalisation of Panchayat Statistics | 4. | Smt. Daya Choubey |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) Answer not known

பஞ்சாயத்து ராஜ் பற்றிய குழுக்களை அதன் தலைவருடன் பொருத்துக :

| பஞ்சாயத்து குழு | | தலைவர் | |
|---|---|---|---|
| (a) | பஞ்சாயத்து ராஜ் தேர்தல் | 1. | ஜி. ராமச்சந்திரன் |
| (b) | பஞ்சாயத்து ராஜ் பயிற்சி மையங்கள் | 2. | வி.ஆர். ராவ் |
| (c) | சமுதாய மேம்பாடும் பஞ்சாயத்துராஜும் | 3. | கே. சந்தானம் |
| (d) | பஞ்சாயத்துராஜின் புள்ளியியல் பகுப்பாய்தல் | 4. | திருமதி தயா சவுபே |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
